**செ.வெ.எண்: 334** **நாள்: 04.06.2025**

# புதுக்கோட்டை மாவட்டம்

## பத்திரிகைச் செய்தி

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திருநங்கைகளுக்கு ஒரே இடத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிட ஏதுவாக சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சியரகத்தில் 24.06.2025 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெற உள்ளது. இச்சிறப்பு முகாமில் திருநங்கைகள் நல வாரியங்கள் மூலம் வழங்கப்படும் அடையாள அட்டை பதிவு செய்தல், ஆதார் அட்டையில் திருத்தம், முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டுத் திட்டம், ஆயுஷ்மான் பாரத் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை போன்றவை பெற்றுக் கொள்ளலாம். எனவே புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து திருநங்கைகளும் கலந்துக் கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai